International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 05 Issue: 01 January to March 2023 www.irjtsjournal.org

# புதுக்கவிதையும் இயற்கையும் - சிற்பி கவிதைகளை முன் வைத்து

முனைவர் மு. முத்துமாறன்
கௌரவ விரிவுரையாளர்
தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வேப்பந்தட்டை.

**ஆய்வுச்சுருக்கம்**

கவிஞன் ஒவ்வொருவனும் இயற்கையை ஆழமாக காதலிக்கிறான். ஒவ்வொரு நாளும் அந்த அழகில் மனம் புதைத்துப் பரவசப்படுகிறான் இற்கையின்ய. எல்லா கூறுகளையும் மிகுந்த ஈடுபாட்டுடன் உள்வாங்கிக் கொள்கின்றான் இயற்கையோடு. மனிதன் கொண்ட தீராத அன்பு மனித சமுதாயத்தின் புறமாகத் திரும்பும்போது கவிஞனின் மனவெளி தீவிரமடைகிறது அப்போது மனித வாழ்க்கையை இயற்கையின். பிம்பத்தோடு ஒன்றிப் பார்க்கிறான் மனிதனின் .வாழ்வை சற்று பின்நோக்கி நகர்த்து வெகுதொலைவு செல்கிறான்வரலாற்றினூடே மனித சமுதாயம் வளர்ந்து வந்த. முறைகளும், நிகழ்காலத்தில் அதன் தன்மைகளும் இணைவதைக் கண்டு எதிர்காலம் நோக்கித் தனது பார்வையை ஆராய விரும்புகிறான். அந்தப்பார்வை, மனிதகுலம் ஒரு புதுமையை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருப்பதைப் அறிய முடிகின்றது. கவிஞர் சிற்பியின் கவிதைகளும் இயற்கை குறித்த புரிதலை உருவாக்குகிறது. கவிஞர் சிற்பி சின்ன சின்ன இயற்கை அம்சத்தின் ஊடாக சமூகத்திற்கு தம் கருத்துகளை எடுத்தியம்புகிறார். அதனை எடுத்துரைக்கும் விதமாய் இக்கட்டுரை அமைகிறது.

**முக்கிய வார்த்தைகள்:**

இயற்கை, வெண்புறவு, தங்கப்பூச்சு, மலையருவி, மந்தியினம், நிலவுப்பூ கன்னல்,

பண்டையத் தமிழ்ச் சான்றோர்கள் இயற்கையை தனி ஒரு பொருளாக நினைத்துப் பாடவில்லை. காதல், வீ ரம் என்பவற்றைத் தலைமைக் கூறுகளாக கொண்டு பிற பல கூறுகளையும் வருணித்து தெளிவு படுத்துவதற்காகவே பண்டைத் தமிழ்ச் சான்றோர் இயற்கையைப் பயன்படுத்தினர். அம்மரபின் வழி வந்த தற்காலக்கவிஞ்ர்களும் அதனையே பின்பற்றி வருகின்றனர். வசனக் கவிதை, மரபுக் கவிதை, புதுக்கவிதை என பல்வேறாக வந்தாலும் இயற்கையைப் பாடாமல் எந்தக் கவிஞனும் இருந்தது இல்லை. உருப்பொருளாய் காணும் அவ்வியற்கையின் பருப்பொருளையும் கருப்பொருளையும் உளம்திறந்து, விருப்புற்று கண்டு, உண்டு அவற்றை அருந்தமிழ் விருந்தாக்கி தமிழ்

மக்களுக்கு வழங்கிச் சென்ற கவிஞர்கள் பலர். அவர்களுள் சிறப்பித்து குறிப்பிட்டு போற்றத்தக்கவர்களில் ஒருவராக திகழ்பவர் வாழும் கவிஞர் சிற்பி ஆவார். இவருடைய இயற்கைக் குறித்தக் கவிதைகள் மற்ற கவிதைகளுக்கு முத்தாய்ப்பாய் விளங்குவது போல் அமைந்துள்ளது.

### இயற்கை சொற் பொருண்மை விளக்கம்

இயற்கை எனும் சொல் “இயல் + கை” இயல் - இயலுதல் கை – தொழிற்பெயர் விகுதி என்ற அடிப்படையில் தோன்றியதாகக் கூறப்படுகிறது. தமிழில் முதல் நூலாகப் போற்றப்படும் தொல்காப்பியத்தில் இயற்கை எனும் சொல்லாட்சி பயன்படுத்தப்பட்டுள்ளதும். சொல்லாட்சியும் காணமுடிகின்றது.

“இயற்கைப் பொருளை இற்றென கிளத்தல்” (தொல். சொல். 19)

இந்நூற்பாவில் இயற்கை என்பதற்கு “தன்னியல்பில் திரியாது நின்ற பொருள்” என்றும் அப்பொருளாக நிலம், தீ, வளி, என்பனவற்றையும் சேனாவரையர் குறிப்பிட்டுக்காட்டுகிறார்.

மேலும் இயற்கை என்ற சொல்லுக்கு “இலக்கணம், பான்மை, சுபாபம், வழுக்கம், நிலைமை, கொள்கை என பல பொருள்களை கழக அகராதி கூறுகிறது. (ப:114) அதே போல தமிழிலுள்ள பெரும்பாலான அகராதிகள் மேற்குறிப்பிட்ட ‘இயல்பு’ என்னும் பொருளமைந்த விளக்கங்களைத் தருகின்றன. க்ரியாவின் தற்காலத்தமிழ் அகராதி “மனிதனால் உண்டாக்கப்படாமல் தானகவே காணப்படும் (மலை, நீர், போன்ற) பொருள் அல்லது தானகவே தோன்றும் (மழை, காற்று, இடி, போன்றவை) சக்தி” என்ற பொருள் தருகிறது. (க்ரியாவின் த.அ-ப:101) ஆங்கிலத்தில் இயற்கை என்ற சொல்லுக்கு நிகராக Nature என்ற சொல் வழங்கப்படுகிறது. எனவே மேற்குறிப்பிட்ட விளக்கங்களைக் கொண்டு ‘இயற்கை’ என்ற சொல் நம்மைச் சுற்றியிருக்கின்ற மனிதனால் உருவாக்கப்படாத நிலம், நீர், காற்று, ஆகாயம், தீ ஆகியவற்றை குறிப்பிடுகிறது எனக்கொள்ளலாம்.

### இயற்கைக் குறித்த அறிஞர்கள் கருத்து

“இயற்கை என்பது கைப் புனைந்து இயற்றாக் கவின் பெறுவனப்பு என்பர் சான்றோர்” என்கிறார் கிருட்டிணமூர்த்தி. “மனிதனைச் சுற்றி சூழ்ந்திருக்கிற அவன் புலன் உணர்வுகளுக்குரிய வெளிப்புற உலகமாக அமைந்திருக்கின்ற (Physical Universal) என்று ஆங்கிலத்தில் விளக்கப்படுகின்ற உலக மேனியே இயற்கை” என்று மேற்கோளோடு துரை சீனிச்சாமி விளக்குகிறார். (இலக்கியத்தில் இயற்கை- ப:199) மேனாட்டாடு அறிஞர் இயற்கைப் பற்றி வரையறுக்கும் போது “நம் நாட்டு அறிவுக்கு புலப்படுவதை இயற்கை” என்கின்றனர் என்று மேற்கோள் காட்டி முனைவர் செ. ரவிசங்கர் விளக்கியுள்ளார். (புதுக்கவிதைகளில் உவமைகள்- ப:106) “புலன்களால் அறியக்கூடியது இயற்கை. அது மனிதனோ அல்லது அவன் படைப்போ அன்று” என்கிறார் தனிநாயகம் அடிகள்.

இயற்கையும் கவிஞனும்

இயற்கையைப் பாடாத கவிஞனும் இல்லை, இயற்கைப் பற்றிப் பாடாதவன் கவிஞனே இல்லை. அப்படிப்பட்ட இயற்கையை கவிஞர்கள் தம் படைப்புகளில் பல பொருள்களுக்குப் பயன்படுத்தி கவிதையைப் படைத்துள்ளனர். கவிஞன் சமகால வாழ்க்கை நிகழ்வுகளிலிருந்து தனது கவிதைக்கான கருவைத் தேர்ந்தெடுக்கிறான். இயற்கையின் காட்சி அழகில் ஈடுபட்டு இன்புறுவது எல்லா மனிதர்களுக்கும் இயல்பே. அதற்கு புறக்காட்சிகள் பொதுவானவை. ஆனால் காட்சி அழகோடு நின்றுவிடாமல் ஐம்புல உணர்வையும் இயற்கையின் வாயிலாக பெற்று அந்த இன்பத்தில் திளைத்து மகிழ்ந்து அக்காட்சிக்கு இலக்கிய வடிவம் கொடுப்பவர்கள் கவிஞர்கள் ஆவர்.

" அழகின் மிகச்சிறந்த பரிணாமம் இயற்கையில் பொதிந்துகிடக்கிறது. இயற்கையை அப்படியே படம்பிடிப்பது கலையின் மிக உயர்ந்த நோக்கமாகும்" என்று பாமர் கார்டன் கூறுகிறார். எனவே கலையின் கூறாக உள்ள கவிதைகளை வெளிப்படுத்துவதில் கவிஞர் சிற்பியும் ஒருவர். இயற்கையை விட்டுவிட்டு கவிதைப் புனைவது என்பது சரியாக அமையாது. எனவே இயற்கையின் மேல் அளவு கடந்த அன்பைக் கொண்ட கவிஞர் சிற்பி பல்வேறு நிலைகளில் இயற்கையை பல காட்சிகளுடன் ஒப்பிட்டு வெளிப்படுத்திக்காட்டுகிறார். கவிஞர் சிற்பி இயற்றிய நிலவுப் பூ எனும் கவிதைத் தொகுப்பில் குறிப்பிடப்படும் கவிதைகளில் நிலவு மலர் கடல் மின்னல் பனி மலை வானவில் என இயற்கையின் அம்சங்களாக விளங்குகின்ற எல்லாவற்றையும் சிறப்பாக தம் கவிதையில் கொண்டு வந்து இயற்கையை மிகைப் படுத்தி காட்டுவது மிகச் சிறந்தப் பதிவாக பிரதிப்பலிக்கிறது.

கவிஞனானவன் இயற்கையை மட்டும் எந்த சூழ்நிலையிலும் விட்டுக்கொடுப்பதே இல்லை. ஏனெனில் கவிதையின் ஆணிவேராகத் திகழ்வதே இயற்கை தான். கவிஞர் சிற்பியின் கவிதைகளில் ஒன்றான மனிதனும் இயற்கையும் எனும் கவிதையில்,

"மன்னும் இமயத்தை வென்றுவிட் டேனேன்று
மனிதன் கொக்கரித்தான் - இயற்கை
இன்னும் நீ வெல்லாத இமயம் உண்டது
'ஆசை ' யென்றே சிரித்தாள்!"

இமயத்தையே தாம் வென்றுவிட்டதாக பெருமைப் பட பேசிக்கொண்டிருந்தான் மனிதன். ஆனாலும் அதற்கு இயற்கை அன்னையானவள் திருப்பிச் சொல்வதாய் கவிஞர் அருமையாகக் குறிப்பிடுகின்றார். நீ எவ்வளவுதான் வென்றாலும் நீ வெல்லமுடியாதது ஒன்றுள்ளது அதுதான் ஆசை. அப்படிப்பட்ட ஆசை எனும் இமயத்தை மட்டும் உன்னால் வெல்லவே முடியாது என இயற்கை அன்னை கூறுவதாய் கவிஞர் விளக்குகிறார்.

மனிதன் இயற்கையிலிருந்து பிரிந்து வாழமுடியாது. பண்டையக்காலத்தில் அவன் இயற்கையின் சீற்றத்தைக் கண்டு அஞ்சி தெய்வமாக வணங்கி வந்துள்ளான் என்பதை நாம் இலக்கியங்களின் வழி அறியமுடிகிறது. சர் தாமஸ் பிரவுன் "இயற்கையை இறைவனின் கலை" என்று குறிப்பிடுகின்றார். கவிஞர் சிற்பி அக்கலையை

அடிப்படையாகக் கொண்டு கவிதையை சிறப்பாக வடிவமைக்கிறார். நிலவைப் பார்த்துக் குறிப்பிடும் போது பெருஞ்சோலையாய் தெரிவதாகவும், நிலவை புறாவிற்கு ஈடாக வைத்து உவமையாக்கும் போது அவரின் கவித்தன்மை கவிதைக்கு மேலும் வலுசேர்கிறது.

“வெள்ளிச் சிறகுகளிலின்றி பறந்திடும்
வெண்புறவோ நிலவு – ஆங்கு”

இதில் வெள்ளிச் சிறகுளிலின்றி பறக்கும் வெண்புறாதான் நிலவோ? ஏன்று ஐயத்தோடுக் கூறுகையில் மிகுந்த ரசனையோடு இயற்கையை விரும்புவது திறம்படக் காணமுடிகிறது.

கடல்

விரிந்து பரந்து கிடக்கிறது கடற்கரை அக்கடலினது தோற்றத்தைக் காணும் போது மேடை போல காட்சி அளிப்பதாக உணர்ந்து கவிதையில் வெளிப்படுத்துகிறார். அப்படிப்பட்ட அழகை வருணிக்கிறார் கவிஞர்,

“நாட்டியப் பெண் ஆடிவரும் மேடை – எழில்
நங்கை யவள் மேற்பறக்கும் ஆடை – தனைக்
காட்டுதல் போல் வெள்ளியலைக்
கண்கவர வே பரதம்
பயிலும் - ஓங்கு
துயிலும்”

கடல் அலையைக்கண்டு நாட்டியப் பெண்ணொருத்தி ஆடி வருவதைப் போலவும், அவளின் மேலே எழுகின்ற அலையை அணியப்பட்டுள்ள ஆடையைப் போலவும் அலையானது பரதம் ஆடிவருவதில் இசையைக் கொண்டு சங்கு உறங்குவதைப் போலவும் குறிப்பிடுகின்றார். ஆதாவது கடலைப் பொண்ணாகப் பாவித்து தம்மை எப்படியெல்லாம் கடல் பெண் வடிவமைத்துக் கொள்கிறாள் என்பதை இயற்கையின் தன்மை மாறாமல் விளக்கிக் காட்டுகிறார்.

வானவில்

சூரிய வெளிச்சத்தில் மழை வரும் போது சுடரில் பட்டு வானவில் தம்மை பிரதிபலித்துக்காட்டும் அப்படித்தோன்றும் வானவில் வண்ணங்களால் தம்மை அலங்கரித்துக் கொள்ளும். அப்படிப்பட்ட வானவில் தம்மை அலங்கரித்துக் கொள்வதை கவிஞர் குறிப்பிடுகையில்,

“வெற்றிலைச் சிவக் கவைக்கும்
மெல்லிய இதழ்ச் சிவப்பு
நெற்குழைக் கதிரில் தங்கி
நிழலிடும் தங்கப் பூச்சு”

வெற்றிலைப் போட்டு சிவக்கின்ற பெண்களுடைய இதழில் தெரியும் சிவந்த நிறத்தை வானவில் காட்டுவதாகவும் மற்றொரு நிறத்தை வருணிக்கும் போது நெற்கதிரில் தங்கி

தம் அழகை மறைத்துக்காட்டும் தங்கப் பூச்சுப் பூசிய பொன்னிறத்தையும் வானவில் காட்டுவதாக இயற்கையை வருணித்து கவிஞர் அழகாகக் காட்டுகிறார். எல்லாவற்றுக்கும் மோலாக இளமை, யாக்கை இவையெல்லாம் நிலையானது அல்ல என்பதற்கு வானவில்லே சாட்சி என

“அழகொளி இளமையெல்லாம்
அழிதலே திண்ணம் என்றே
எழிலுற விளக்குவதற்கோ
இத்தனை வரைவிற் போனாய்”

என்று நிலையாமைக் கருத்தை இயற்கையோடு ஒப்பிட்டு வாழ்க்கை நிலையைத் தெளிவுப்படுத்துகிறார்.

ஆறு

இயற்கைப் பற்றி வருணிக்கும் போது ஆற்றைப் பற்றி சிறப்பாக வருணிக்கிறார். பொன்னி என்று சொல்லப்படுகிற கரைபுரண்டோடும் காவிரியின் அழகை குறிப்பிடும் போது

“நுரையினில் நகைத்து நல்லோர்
நூலெனப் பரந்து செல்லக்
கரையினைச் சாடிக் கன்னல்
காட்டினுள் மீன்கள் மின்னத்”

ஆற்று நீரில் மிதந்து வருகின்ற நுரையினை பார்க்கும் போது அந்நுரையானது சிரித்துக் கொண்டே வருவதைப் போலவும் கரையினை ஒட்டிப் போகின்ற ஆற்றின் அருகிலுள்ள காட்டில் மீன்கள் மின்னி மின்னி தெரிவதாகவும் இயற்கை அழகை மாறாமல் காட்டுகிறார்.

அருவி

மலைச் சாரலில் விழுந்து ஓடுகின்ற அருவியின் அழகை வருணிக்கும் போது

“மலையருவி முழக்கமிடும்
மந்தியினம் அஞ்சிக்… ”

“ஒலி கேட்டு கலைமான்கள்
உறைவிடத்தின் பக்கம்
புலி வந்ததென்றெண்ணிப்
போயோடிப் பதுங்கும்”

முழக்கமிடும் அருவியின் ஓசைக் கேட்டு குரங்கினமெல்லாம் அஞ்சி ஓடும் அதேபோல அவ்வோசைக் கேட்டவுடன் மான்களெல்லாம் புலிகள் தான் வந்துவிட்டதோ என்று எண்ணி பயத்தில் தாம் இருக்கும் இடம் நோக்கி ஓடும் என்பதை இயற்கையின் அழகு மாறாமல் தன் கவிதையில் தெளிவுப்படுத்துகிறார்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

முடிவுரை:

இயற்கைப் பொருளைக் கவிஞர்கள் சமுதாயக் கூறுகளின் மீது ஏற்றிப்பார்க்கும் பாரம்பரியத் தன்மை நெடுங்காலமாகவே இருந்து வருகிறது. அவ்வகையில் கவிஞர் சிற்பி அவர்களும் பாரம்பரியத்தன்மை மாறாமல் தாம் கூறும் கவிதைகளில் சமுதாயக் கருத்துக்களை உள்வைத்து அன்றாடம் வாழ்வில் நடக்கின்ற நிகழ்வுகளை மையப்படுத்தி அதன் வழியே பல்வேறு செய்திகளை இயற்கையை அடிப்படியாகக் கொண்டு கருத்துப்பதிவுகளை வெளிக்கொணர்கிறார். அதேபோல இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையேயான தொடர்புகளையும் மனிதன் அதன் மூலம் இயற்கையைக் கொண்டு வாழ்க்கைத் தன்மையை எப்படியெல்லாம் அறிந்து கொள்ளமுடியும் என்கிற கருத்தை தம்முடையக் கவிதைகளில் இயற்கையைக் கொண்டு தெளிவுபடுத்தியிருப்பது புலனாகிறது.

பயன்பட்ட நூல்கள்

[1] பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை - மு. வரதராசன்

[2] இலக்கியங்களில் இயற்கை - முனைவர். சோ. குருசாமி

[3] புதுக்கவிதைகளில் உவமைகள் - முனைவர் செ. ரவிசங்கர்

[4] கவிதையெனும் மொழி - தி.சு. நடராசன்

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு

© 2023, IRJTSR